# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ்(சனிக்கிழமை தோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2056, ஜூன் 7, 2025 | Weekly E-paper • June 7, 2025



# ஆடிட்டர் புகுந்த வீடு...?

சுப. வீரபாண்டியன்

## கருஞ்சட்டைப் பதிப்பகம், நூல்கள்

## வள்ளுவர், ஸ்டாலின், மோடி!

தலையங்கம்

## "ஓரணியில் தமிழ்நாடு" இதுதான் ஸ்டாலினிசம்!

காசு. நாகராசன்

கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ்(சனிக்கிழமை தோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2056, ஜூன் 7, 2025 Weekly E-paper ● June 7, 2025

# ஆடிட்டர் புகுந்த வீடு...?

சுப. வீரபாண்டியன்





நேற்று முன்தினம் 'எக்ஸ்' தளத்தில், இந்தத் தலைப்பை மட்டுமே ஒரு செய்தியாக வெளியிட்டிருந்தேன். பல்லாயிரக்கணக்கான வர்களிடமிருந்து அதற்கு வரவேற்பும், ஒரு சிலரிடமிருந்து வழக்கம் போல் ஆபாசமான சொற்களால் எதிர்ப்பும் வந்துள்ளன.

தலைப்பே ஓர் ஆழமான செய்தியைச் சொல்கிறது என்பதைப் புரிந்து கொண்டே பலரும் வரவேற்றுள்ளனர். எனவே அது குறித்துச் சற்றுக் கூடுதலாகப் பார்க்க வேண்டியிருக்கிறது!

முதலில், ராமதாஸ் - அன்புமணி சண்டையை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அது குடும்பச் சண்டையோ, உட்கட்சிப் பிரச்சனையோ அல்ல! திமுகவிற்கு எதிராகப் பாஜக தொடங்கி இருக்கும், பல்வேறு அரசியல் சதிகளில் அதுவும் ஒன்று! அதனால்தான் பற்றி எரியும் வீட்டிற்குள், சரியான நேரம் பார்த்து ஓர் ஆடிட்டர் அனுப்பப்படுகிறார்.

கமல்ஹாசனை மையமாக வைத்து நடக்கும் கன்னடம் - தமிழ் மோதலும் திட்டமிட்ட பாஜகவின் சதி என்பதை நாம் உணர வேண்டும். திமுக விற்கு எதிரான அரசியல் சதுராட்டங்களில் அதுவும் ஒன்று, அவ்வளவுதான்! அதனைத் தாண்டி, மொழி உணர்ச்சி, மோதல் என்பதெல்லாம் வெறும் வெளித்தோற்றம்!

குருமூர்த்தியோடு சைதை துரைசாமியும் சேர்ந்து வந்ததைக் கவனத்தில் கொள்ள வேண்டும். என் 30 ஆண்டுகால நண்பரைச் சந்திக்க வந்தேன் என்று குருமூர்த்தி சொல்கிறார். இப்படி எல்லாம் கூசாமல் பொய் சொல்வதற்கு அவர்களுக்கு எந்தப் பயிற்சியும் தர வேண்டியது இல்லை. 30 ஆண்டு கால நண்பரை ஏன் இதற்கு முன்பு சந்திக்கவே இல்லை? இரண்டு பேரும் "கோமா " விலா இருந்தார்கள்!

அதிமுக, பாஜக, தவெக, பாமக கூட்டணி என்பது அவர்களின் திட்டம் ! தேமுதிகவையும் ஒரு கொசுறாக இணைத்துக் கொள்ளலாம் என்பதே அவர்கள் கணக்கு!


தைலாபுரத்திற்குக் குருமூர்த்தி தானாக வரவில்லை. அமித்ஷா சொல்கிறார், அதைக் குருமூர்த்தி செய்கிறார்!

இபிஎஸ் - ஓபிஎஸ் சண்டை எங்கே முடிந்தது? இரண்டு பேரும் பாஜகவிடம் சரண் அடையும் இடத்தில் முடிந்தது ! ராமதாஸ் - அன்புமணி சண்டையும் அங்குதான் முடியும்!

நம்மைப் போன்றவர்களுக்குப் புரிகிற இந்தச் செய்திகள் ராமதாஸ் போன்ற அனுபவம் மிக்கவர்களுக்குப் புரியாதா? புரியும்! ஆனால் பேரம் வேறு மாதிரியானது!

இந்த ஆண்டு, செப்டம்பர் மாதத்தைத் தாண்டும்போது, இன்னும் பல கூத்துகள் இங்கு அரங்கேறும் ! குருமூர்த்திகள் இன்னும் பல வீடுகளுக்குப் போய் வருவார்கள்!

●




*சுயமரியாதை இயக்க நூற்றாண்டை முன்னிட்டுக் கருஞ்சட்டைப் பதிப்பகத்தின் புதிய வெளியீடாக விரைவில் வெளிவருகிறது 'இதழியல் களத்தில் பெரியார்' எனும் நூல்.*

*300க்கும் அதிகமான கட்டுரைகள், கட்டுரைகள் மீதான ஆய்வுரைகள் அடங்கிய 1500 பக்கங்கள், கெட்டி அட்டையில், ராயல் சைஸ் அளவில் நூல் உருவாக்கப் பட்டுள்ளது. நூல் உருவாக்கத்திற்கான பொருளாதாரத் தேவையின் அடிப்படையில் இந்நூலுக்கு முன் வெளியீட்டுத் திட்ட அறிவிப்பை வெளியிட்டு உள்ளோம்.*






இதற்கு வெளியில் இருந்து ஆதரவுகள் வந்துள்ளன. அது மட்டும் போதாது. திராவிட இயக்கத் தோழர்கள், நண்பர்கள், திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தோழர்கள் தங்களாலான முன்பதிவை செய்து எங்களின் இந்த முயற்சிக்குத் துணை நிற்குமாறு கருஞ்சட்டைப் பதிப்பகத்தின் சார்பில்கேட்டுக் கொள்கிறேன்.


தோழமையுடன்
**பெல்.இராஜன்,**
**கருஞ்சட்டைப் பதிப்பகம்**

## புதிய வெளியீடுகள் (பதிப்பகத் தொடர்பு எண்: 8122946408)



தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## வள்ளுவர், ஸ்டாலின், மோடி!

"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்

சொல்லிய வண்ணம் செயல்" என்று சொல்லும் பெரும்புலவர் திருவள்ளுவர் இன்னொரு இடத்தில் "கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு

சொல்வேறு பட்டார் தொடர்பு" என்று கூறுகிறார்.

முதலில் சொன்ன குறள் தமிழ்நாடு முதல்மைச்சருக்குப் பொருத்தமாகும். அவர் சொல்கிறார், அதைச்செய்து முடிக்கிறார்.

சொல்வது ஒன்று, செய்வது வேறு என்று செயல்படுபவரின் தொடர்பு, கனவில் வந்தாலும்கூடத் துன்பத்தைத் தரும் என்பது இரண்டாவதாகச் சுட்டிக்காட்டிய குறளின் பொருள். இது பிரதமர் மோடிக்காக எழுதப்பட்டது போல அமைந்துவிட்டது.

அமெரிக்க அதிபர் டிரம்ப் அரசு, நாடுகடத்தல் என்ற பெயரில் ஒன்றிய இந்திய மக்களைக் குற்றவாளிகள் போல விலங்கிட்டு விமானத்தில் அனுப்பியது.

பிரதமர் என்ற முறையில் அவர் அதைத் தட்டிக் கேட்கவில்லை மோடி. இந்திய ஏற்றுமதி, இறக்குமதி வணிகத்திற்கு அதிக வரிவிதித்தார், டிரம்ப். அப்போதும் ஒன்றும் பேசவில்லை பிரதமர்.

பெகல்காம் தாக்குதலுக்குப் பதிலடி கொடுத்து பாக்கிஸ்தான் தீவிரவாதிகள் முகாம் மீது இந்திய ஒன்றியம் தாக்குதல் நடத்தியபோது "நான்தான் போரை நிறுத்தச் சொன்னேன்" என்று பலமுறை சொன்னார் டிரம்ப். இதுவரை அது குறித்து எந்த விளக்கமும் சொல்லவில்லை மோடி.

மணிப்பூர் பற்றிப் பேசுவதில்லை, முக்கிய பிரச்சனைகள் குறித்துப்பேச நாடாளுமன்றத்தை எதிர்கட்சிகள் கூட்டச் சொன்னால் கூட்டுவதில்லை, அவைக்கு வந்தாலும் கேள்விகளுக்குப் பதிலளிப்பதில்லை, பத்திரிகையாளர்களைச் சந்திப்பதே இல்லை.

தேர்தல் வரும்போது மட்டும் நாட்டைக் கல்வியில் உயர்த்துவேன், பொருளாதாரத்தில் உயர்த்துவேன், வேலைவாய்ப்புகளைப் பெருக்குவேன், மதுரையில் எய்ம்ஸ் கட்டுவேன், ஆளுக்கு 15 லட்சம் ரூபாய் கொடுப்பேன் இத்தியாகி... இத்தியாதி என்று பேசுவார். தேர்தல் முடிந்ததும் நாட்டு மக்களைச் சந்திப்பதை விட்டுவிட்டு உலகத் தலைவர்களைச் சந்திக்கப் பறந்துவிடுவார்.

சொல்வார், சொன்னதைச் செய்வார், ஸ்டாலின். இது நினைத்தாலே மகிழ்ச்சிதான். சொல்வார், செய்யமாட்டார் மோடி. இதுகனவு என்றாலும் கஷ்டமாகத்தான் இருக்கும்.

இவர்களைப் பற்றி அன்றே சொன்ன திருவள்ளுவர் பெரிய 'தீர்க்கதரிசி' தான்!

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை– 600 024,
தொலைபேசி: 044-2472 6408



தமிழ்நாடு முன்னால் முதலமைச்சர், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 102 ஆம் பிறந்த நாளான 03-06-2025 அன்று, பேரவைத் தலைமை அலுவலகத்தில் தலைவர் கலைஞர் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார்கள் தோழர்கள் பெல்ராஜன், கார்த்தி, லோகபாலன், மனோகரன், இளங்கோ ஆகியோர்.

# "ஓரணியில் தமிழ்நாடு" இதுதான் ஸ்டாலினிசம்!

காசு. நாகராசன்

ஜூன் முதல் நாளன்று கூடல் மாநகராம் மதுரையில் திமுகழகத்தின் பொதுக்குழுக் கூட்டம் எழுச்சியோடு நடந்து முடிந்திருக்கிறது. 2026 ஆம் ஆண்டு நடைபெற இருக்கும் தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலுக்கான ஏற்பாடாக இந்தப் பொதுக்குழு பிரமாண்டமாகக் கூட்டப்பட்டது என்றாலும், திமுக வெறும் தேர்தல் அரசியல் கட்சி மட்டுமல்ல, அது தமிழ் இனத்தின் விடியலுக்கான கொள்கைகளைக் கொண்ட கட்சி. என்பதை பொதுக்குழுத் தீர்மானங்கள் பறை சாற்றுகின்றன.

1949 ஆம் ஆண்டு பெரியாரோடு முரண்பட்டுத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் என்கிற அமைப்பை பேரறிஞர் அண்ணா தொடங்கினார் . ஆனால் அந்த முரண்பாடு பெரியார் என்கிற தத்துவத்தின் மீதான முரண்பாடு அல்ல என்பதை இன எதிரிகள் புரிந்து கொள்வதற்குத்தான் கொஞ்சம் காலம் பிடித்தது.

1952 ஆம் ஆண்டு இந்தியக் குடியரசின் முதல் பொதுத்தேர்தலை திமுகழகம் எதிர்கொண்ட விதம் வித்தியாசமானது. அந்தத் தேர்தலில் திமுக பங்கேற்கவில்லை. ஆனால் பங்கேற்ற வேட்பாளர்களை திமுக ஆதரித்தது. எப்படித் தெரியுமா? திமுகவின் திராவிட நாடு கோரிக்கை உள்ளிட்ட இனம், மொழி சார்ந்த கொள்கைகளை ஏற்றுக்கொள்கிறேன் என பத்திரத்தில் கையெழுத்திட்டுக் கொடுத்த வேட்பாளர்களை ஆதரிப்பதாக அண்ணா அறிவித்தார். அப்படி ஒப்புக்கொண்டு திமுகவின் ஆதரவைப் பெற்ற வேட்பாளர்களில் பெரும்பான்மையானவர்கள் வெற்றி பெற்றார்கள். சட்டமன்றத்தில் திமுகவின் குரலை ஒலிக்கவும் செய்தார்கள்.



தேர்தலுக்குள் போகாமலேயே தனது கருத்துக்கும் கொள்கைக்கும் தேர்தல் அரசியலில் பெரும்பான்மையை உறுதிசெய்த அண்ணா, தான் கண்டதும் கொண்டதுமான ஒரே தலைவர் தந்தை பெரியாரின் தத்துவங்களுக்குச் செயல்வடிவம் கொடுக்கக் கையாண்ட மாற்றுத் திட்டம் தான் திமுக என்பதை நாட்டு மக்களுக்கும், இனப் பகைவர்களுக்கும் உரக்கக் கூறிய ஆண்டு 1967.

இந்திய அரசியல் வரலாற்றில் முக்கால் நூற்றாண்டைக் கடந்தும் மக்களின் பேராதரவோடு இன்றைக்கும் அதிகாரத்திலிருக்கிற ஒரே ஒரு மாநில கட்சி திமுகழகம் மட்டும் தான். அதுமட்டுமல்ல, கடந்த எழுபதாண்டுகளாக தேர்தல் அரசியலில் இனமான அறிவு விடுதலையை முன்வைத்துத் தேர்தலைச் சந்தித்து அதில் ஆறுமுறை ஆட்சியில் அமர்ந்து தமது கொள்கைகளை எல்லாம் சட்டமாக்கி நடைமுறைப் படுத்தி வருகிற கட்சி என்கிற பெருமையும் திமுகழகத்திற்கு மட்டுமே உண்டு.

இதில், இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் கடந்த

50 ஆண்டுகளாக கட்சியின் தலைவராகவும் 19 ஆண்டுகளாக ஆட்சியின் தலைவராகவும் இருந்து கொள்கைவழி ஆட்சியையும், கட்சியையும் கட்டுக்குலையாமல் வழிநடத்தியவர் கலைஞர்.

கலைஞரால் வளர்க்கப்பட்டு, கலைஞரின் விரல்பிடித்து நடந்து அரசியல் பயின்றவர் தளபதி மு க ஸ்டாலின். நான் கலைஞரைப் போல எழுத்தாளரில்லை, பேச்சாளரில்லை என்று தன்னடக்கத்தோடு தன்னை அடையாளப்படுத்திக் கொண்டு கலைஞருக்குப் பின் கட்சியையும் ஆட்சியையும் தலைமைதாங்கி நடத்திவருகிற முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்கள் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு கட்சியையும், ஆட்சியையும் கூடுதல் வலுவோடு செயல்படுத்தி வருகிறார்.

அதேநேரம், கலைஞரே எதிர்கொள்ளாத அளவிற்கு மிக மோசமான எதிரிகளை, சட்டத்தையே மதிக்காமல் செயல்படுகிற கொள்கை எதிரிகளை ஒருபுறமும், அவர்களின் வஞ்சக சூழ்ச்சி அரசியலையும், அந்த இனப்பகைவருக்குத் துணைநின்று சேவகம் புரிந்துவரும் சுக்ரீவன் விபீஷணன் போன்ற துரோகிகளையும் ஒரே நேரத்தில் எதிர்கொண்டு நிற்கிறார் திராவிடமாடல் முதலமைச்சர்.

2026 தேர்தல் களத்தில் வாகை சூடி ஏழாவது முறையாக திமுகழகத்தின் ஆட்சியையும் திராவிடமாடல் 2.0 இரண்டாம் பாகத்தையும் நிறுவிட வேண்டும் என்கிற முதலமைச்சரின் கோரிக்கைக்கு, முழக்கத்திற்குப் பின்னால் இருப்பது வெறும் அதிகாரப் பிரச்சினை அல்ல. மீட்கப்பட்டிருக்கிற விடுதலை வரலாற்றைப் பாதுகாக்க வேண்டிய தேவையின் கவலையே மேலோங்கி நிற்கிறது.

1909 ஆம் ஆண்டு தொடங்கிய பார்ப்பனரல்லாதார் நலன் காக்கும் போராட்டம் 1912 இல் தொடங்கிய திராவிட சங்கத்தின் நோக்கம், 1916 ஆம் ஆண்டு அடிகோலிய நீதிக்கட்சியின் இலட்சியம், 1920 ஆம் ஆண்டு அமைந்து 17 ஆண்டுகள் தொடர்ந்த நீதிக்கட்சி ஆட்சியின் சாதனைகள் 1967 முதல் 2011 வரையிலான காலகட்டத்தில் இடையிடையே 21 ஆண்டுகால திமுகழக ஆட்சியின் முன்னேற்றத் திட்டங்கள் என நூற்றாண்டில் நாம் பெற்ற வெற்றிகளை எல்லாம் டில்லியின் கட்டுப்பாட்டில் ஒப்படைத்த கூட்டம் இப்போது தமிழ்நாட்டையும் தாய்த் தமிழையும், தமிழர் உரிமைகளையும் பற்றிய கவலை கிஞ்சித்தும் இன்றி தங்கள் சொந்தக் கட்சியையும் கொண்டு போய் அடகுவைத்திருக்கிறார்கள்.

இந்த வஞ்சக விபீஷணன் கும்பலின் துரோகத்தைத் தோலுரித்து, நம்முடைய இன, மொழி, நாடு காக்கும் உரிமைப் போரில் தமிழர்கள் ஓரணியில் திரண்டிட வேண்டும் என அறைகூவல் விடுத்திருக்கிறது மதுரைப் பொதுக்குழு. அதாவது, "ஓரணியில் தமிழ்நாடு" என்கிற முழக்கத்தோடுத் தெருத்தெருவாக, வீடு வீடாகச் சென்று திராவிடமாடல் ஆட்சியின் திட்டங்களையும் அதன் தேவைகளையும் சொல்வதோடு இனத் துரோகிகள் , வஞ்சகர்களின் கூட்டுச் சதியையும் தமிழ்நாட்டு இளைஞர்களிடம், மாணவர்களிடம் எடுத்துக் கூறி எல்லோரையும் ஒன்று திரட்டுங்கள் என்பதே இதன் கோரிக்கை.

1916 ஆம் ஆண்டு சென்னை ஸ்பர்டாங் சாலையில் நமது நீதிக்கட்சியின் தலைவர் டாக்டர் தரவாட்டு மாதவனார் முழங்கிய "திராவிட இளைஞனே, விழி! எழு! இன்றேல் வீழ்ந்து படுவாய்!" என்ற எச்சரிக்கை முழக்கமே நமக்கு இப்போது திராவிடமாடல் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களால் "ஓரணியில் தமிழ்நாடு " என்று வடிவமைத்து வழங்கப்பட்டிருக்கிறது என்பதைப் புரிந்துகொண்டு நமது பணிகளை. வெற்றி பெறுவோம்!! ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian